பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

31 03 2024 **SUNDAY** 12 40 **AM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. கச்சத்தீவை இலங்கைக்கு விட்டுக் கொடுத்த விவகாரத்தில் காங்கிரஸ் எவ்வளவு மெத்தனமாக செயல்பட்டுள்ளது என்பது தற்போது வெளிவந்துள்ள புதிய தகவல் மூலம் தெரியவந்துள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.

2. மத்தியில் ஆட்சிப் பொறுப்பேற்றால் வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

3. அருணாச்சலப்பிரதேச சட்டப்பேரவை தேர்தலில் பிஜேபி வேட்பாளர்கள் 10 பேர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

4. உள்நாட்டு ஒட்டுமொத்த வளர்ச்சி விகிதம் சீராக உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

5. அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Parvej Khan** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

>>>><<<<

கச்சத்தீவை இலங்கைக்கு விட்டுக் கொடுத்த விவகாரத்தில் காங்கிரஸ் எவ்வளவு மெத்தனமாக செயல்பட்டுள்ளது என்பது தற்போது வெளிவந்துள்ள புதிய தகவல் மூலம் தெரியவந்தள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், காங்கிரஸ் கட்சியின் இந்த நடவடிக்கை, அக்கட்சியின் மீதான மக்களின் கோபத்தை அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக, காங்கிரஸ் கட்சியை நம்ப மக்கள் தயாராக இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டினை பலவீனப்படுத்தும் வகையில் காங்கிரஸ் அரசு கச்சத்தீவை இலங்கைக்கு விட்டுக் கொடுத்துள்ளதாக திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

கச்சத்தீவை இலங்கைக்கு வழங்கிய விவகாரம் தொடர்பாக ஆங்கில நாளேடு ஒன்றில் வெளியான கட்டுரையை அடுத்து பிஜேபி தலைவர்கள் பலரும் இப்பிரச்சினை குறித்து கருத்து தெரிவித்து வருகின்றனர்.

தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட விவரங்களை அடிப்படையாக கொண்டு ஆங்கில நாளேடு அக்கட்டுரையை வெளியிட்டுள்ளது.

>>>><<<<

மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சிப் பொறுப்பேற்றால் வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அக்கட்சியின் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இளையோரின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில், அவர்களை தொழில் முனைவோர்களாக உருவாக்குவதற்கான திட்டங்களும் செயல்படுத்தப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

30 லட்சம் புதிய அரசு பணியிடங்கள் உருவாக்கப்படும், தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் போன்ற பல்வேறு உறுதிமொழிகளை காங்கிரஸ் அளித்திருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இளையோருக்கு காங்கிரஸ் அளிக்கும் உத்தரவாதம் இது என்றும் திரு. மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

>>>><<<<

மக்களவைக்கு முதற்கட்டமாக தேர்தல்நடைபெறவுள்ள 102 தொகுதிகளில் வாக்குப்பதிவிற்கான தேவையான அனைத்து முன்னேற்பாட்டுப் பணிகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேர்தல் பணிகளில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

யாருக்கு வாக்களித்தோம் என்பதை அறிந்து கொள்ளும் வசதியுடன் கூடிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் செயல்பாடுகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

முதற்கட்ட தேர்தல் நடைபெறவுள்ள தொகுதிகளில் இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதால், சின்னங்களை பொருத்துவதற்கான நடவடிக்கைகளும் தொடங்கியுள்ளன.

வாக்குச்சாவடிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கான செயல்திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

பதற்றம் அளிக்கக்கூடியவை என கண்டறியப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளில் கூடுதல் கண்காணிப்பிற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழகத்தில் வாக்குச்சாவடி சீட்டுகள் நாளை முதல் விநியோகம் செய்யப்படவுள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாஹூ கூறியுள்ளார்.

(சவுண்ட் பைட் - சத்யபிரத சாஹூ(1) 32 செகண்ட்ஸ்)

வாக்குச்சாவடிகளில் கூடுதல் கண்காணிப்பு கேமராக்களை பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

(சவுண்ட் பைட் - சத்யபிரத சாஹூ(2) 34 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, இந்த தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்படும் பணம் மற்றும் பரிசுப் பொருட்களும் பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன.

உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில், பறிமுதல் செய்யப்பட்ட பணம் மற்றும் பொருட்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்தியுள்ளது.

தேர்தல் பிரச்சாரத்தின் போது, நடத்தை நெறிமுறைகள் முழுமையாக பின்பற்றப்படுவதை அரசியல் கட்சிகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையிலான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாடுமுழுவதும் தேர்தல் ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேபோல் முதல்முறை வாக்காளர்கள் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் நடைபெற்ற இதுபோன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள், இந்த தேர்தலில் வாக்களிக்கவுள்ளதை ஆவலுடனும், மகிழ்ச்சியுடனும் எதிர்நோக்கியுள்ளதாக தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - மாணவர்கள் 35 செகண்ட்ஸ்)

>>>><<<<

நாட்டின் உயரிய விருதான பாரத ரத்னா விருதினை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிஜேபியின் மூத்த தலைவர் திரு. எல்.கே. அத்வானிக்கு இன்று வழங்கினார்.

புதுதில்லியில் உள்ள திரு. எல்.கே. அத்வானியின் இல்லத்திற்கு சென்று குடியரசுத்தலைவர் இந்த விருதினை வழங்கினார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

>>>><<<<

அருணாச்சலப்பிரதேச சட்டப்பேரவை தேர்தலில் பிஜேபியைச் சேர்ந்த 10 வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

அடுத்த மாதம் 19ஆம் தேதி நடைபெறவுள்ள இந்த தேர்தலுக்கான வேட்புமனுக்களை திரும்பப் பெறுவதற்கான காலஅவகாசம் நேற்று நிறைவடைந்தது.

இதனையடுத்து, இவர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

60 உறுப்பினர்களைக் கொண்ட அருணாச்சலப்பிரதேச சட்டப்பேரவைக்கு நடைபெறவுள்ள இந்த தேர்தலில் பிஜேபியைச் சேர்ந்த 10 பேர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதை அடுத்து எஞ்சிய 50 தொகுதிகளுக்கு மட்டுமே வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

>>>><<<<

உள்நாட்டு ஒட்டுமொத்த வளர்ச்சி விகிதம் சீராக உள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

மும்பையில் முதலீடு தொடர்பான உச்சிமாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

நடப்பு நிதியாண்டின் நான்காவது காலாண்டில் இது எட்டு சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

**>>>><<<<**

இயேசு பிரான் உயிர்த்தெழுந்த தினமான ஈஸ்டர் பண்டிகை இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, கிறிஸ்தவ தேவாலயங்களில் நடைபெற்ற சிறப்பு பிரார்த்தனைகளில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

**>>>><<<<**

மதுபான கொள்கை முறைகேடு தொடர்பாக தில்லி போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. **Kailash Gahlot –**யிடம் அமலாக்கத்துறையினர் நேற்று விசாரணை மேற்கொண்டனர்.

ஐந்து மணி நேரம் நடைபெற்ற இந்த விசாரணைக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய திரு. **Kailash Gahlot** அமலாக்கத்துறையினரின் அனைத்து கேள்விகளுக்கும் பதில் அளித்துள்ளதாக கூறினார்.

**>>>><<<<**

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Parvej Khan** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 800 மீட்டர் ஓட்டப் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

**>>>><<<<**

**San Luis Open Tennis** போட்டியில் இந்தியாவின் **Niki Kaliyanda Poonacha - Rithvik Choudary Bollipalli** இணை பட்டம் வென்றது.

மெக்ஸிக்கோவில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 6-3, 6-2 என்ற செட் கணக்கில் சுவிட்சர்லாந்தின் **Bellier - Huesler** இணையை வென்றது.

**>>>>END<<<<**